1984 மார்ச் 22]

பெரம்பலூர் பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் :

399. (* வினா எண் 20067):—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் பெரம்பலூர் பேரூராட்சி பகுதிக்குக் குடி நீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : திருச்சி மாவட்டத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப் படும் துறையூர் மற்றும் குரும்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பெரம்பலூர் பேரூராட்சியும் இடம் பெறுகிறது.

மம்சாபுரம் நகரப் பஞ்சாயத்திற்கான குடிநீர்த் திட்டம் :

400 (*வினா எண் 20608):—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா மம்சாபுரம் நகரப் பஞ்சாயத்திற்குக் குடிநீர் வசதி செய்துதரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) மம்சாபுரம் பேரூராட்சிக்கான பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தால் பரிசீலனை செய்யப்பட்டு அதற் கான குடிநீர் ஆதாரங்கள் சரியானதாக இல்லை என அறியப் பட்டது. எனவே, வேறு நிலையான குடிநீர் ஆதாரம் கிடைக் குமா என மறு ஆய்வு செய்யப்பட்டு உள்ளது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மம்சா புரமானது 10,000 ஜனத்தொகை உள்ள ஒரு பெரிய நகர பஞ் சாயத்து. அதற்குப் பக்கத்திலே குடிநீர் ஆதாரம் இல்லையென்று சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 3 மைல்கள் தூரத்தில் அத்தி ஊத்து ஆற்றிலிருந்து ஏற்கெனவே 20 வருஷங்களாக ஸ்ரீவில்லிப் புத்தூர் டவுனுக்கு தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் நீர் ஆதாரம் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். எனவே, இந்த அத்திஊத்து ஆற்றிலிருந்து உடனடியாகத் தண்ணீரை எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய் யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 22

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், மம்சாபுரம் பேரூராட்சியில் சுமார் 15,000 பேர்கள் இருக்கிறார்கள். உறுப்பினர் சொல்வதற்கு மேல் 5,000 பேர்கள் அதிகமாக அங்கே இருக்கிறார்கள். ஆய்வுத் தொகையாக அவர்கள் ரூ. 17,000 செலுத்தினார்கள். இருந்தும், பரிசீலனை செய்ததில் அங்கே தண்ணீர் ஆதாரம் இல்லையென்று தெரிகிறது. எனவே, மறு ஆய்வு நடத்த வேண்டியிருக்கிறது. அதற்காக ரூ. 1.05 இலட்சம் பேரூராட்சி ஆய்வுத் தொகையாக வாரியத்திற்குச் செலுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு நடத்த போவதாகவும், அதற்காக ரூ. 1.05 இலட்சம் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. உடனடியாக அவர்கள் கட்டணத் தொகை கட்டத் தயாராக இருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது. ஆய்வு செய்வதிலே தான் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, உடனடியாக இந்த அத்திஊத்து ஆற்றிலிருந்து தண்ணீரை எடுக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். உண்மையிலேயே அவர்கள் சொன்னது போல், அங்கே உள்ள கிணறுகளில் உப்புத் தண்ணீர்தான் இருக்கிறது. அது சவர் (sour) தண்ணீராக இருக்கிறது. அந்த சவர் (sour) தண்ணீரைத்தான் குடித்துக்கொண்டு இன்றைக்கு வரைக்கும் உயிரோடு இருக்கிறார்கள். அதை மாற்றியமைத்து, நல்ல தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொன்னதைப்போல 1.05 இலட்சம் ஆய்வுத் தொகையைக் கட்டிவிட்டால் உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மம்சாபுரம் பேரூராட்சியில் இப்பொழுது அங்கே உள்ள மக்கள் கிணற்றுத் தண்ணீரைத்தான் குடிக்கிறார்கள். அடிக்கடி காலரா நோய் அந்த ஊரில் அதிகமாக வருகிறது. இப்பொழுது வெள்ளம் வேறு வந்துவிட்டது. ஆகவே, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் அவர்களுக்குக் கிடையாது. தண்ணீர் அந்தப் பகுதியில் இல்லை. அருமை அண்ணன் திரு. சிவசாமி அவர்கள் கூறும்பொழுது அத்திஊத்து என்ற இடத்தில் இருக்கின்ற தண்ணீரை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தத் தண்ணீர் ஸ்ரீவில்லிப்புத்தூருக்கே சரியாக இருக்குமாதலால் அந்தத் தண்ணீரை எடுக்க முடியாது. மம்சாபுரத்தில் நீரோட்டம் அதிகமாக இருக்கின்ற வாழைக்குளம் என்ற இடம் இருக்கிறது. அதிகாரிகளை என்னோடு அனுப்புங்கள். நீரோட்டம் உள்ள இடத்தை நான் காட்டுகிறேன். விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 22]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஊரில் 21 குடிநீர்க் கிணறுகள் உள்ளன. ஆனால் அதிலே நல்ல தண்ணீர் இல்லை. இருப்பினும் இந்த அரசால் 16 கைப்பம்புகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆய்வுத் தொகையைக் கொடுக்க ஏற்பாடு செய்தால் நல்லது. தன்னோடு என்ஜினியர்களை அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். அது முறையாக இருக்காது. வேண்டுமானால் என்ஜினியர்கள் ஆய்வுக்குப் போகும்பொழுது அவர்களோடு இவரும் சேர்ந்து போகலாம். அதில் தடை இல்லை. அவ்வாறு சென்று இன்னின்ன இடத்தில் தண்ணீர் இருக்கிறது என்று ஆலோசனை சொல்வது முறையாக இருக்கும். ஏனென்றால் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்வார்கள். ஆளுங்கட்சி எம். எல். ஏ.வுடன் அதிகாரிகள் போகலாமா என்று. ஆகவே, என்ஜினியர்கள் ஆய்வுக்குச் செல்லும்பொழுது மாண்புமிகு உறுப்பினர்களும் சென்று இன்னின்ன இடங்களில் சோர்சஸ் இருக்கின்றன என்று "ஜியாலஜிகல் சர்வே" (Geological Survey) செய்பவர்களிடம் சொன்னால் உதவியாக இருக்கும். முதலில் நீங்கள் கொடுக்க வேண்டியது ஆய்வுத் தொகை. அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படியாக வேண்டிக்கொள்கிறேன்.

தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தொழிற் பயிற்சியளிக்கும் திட்டம்.

401.—(*வினா எண். 21596)—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள தேயிலை, காப்பி தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுடைய குழந்தைகள் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிற் பயிற்சி பெறுகிறார்களா ?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு பயனடைந்தோர் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி, தமிழகத்திலுள்ள தேயிலை காப்பித் தோட்டங்களில் பணி புரியும் தொழிலாளர்களுடைய குழந்தைகள் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிற் பயிற்சி பெறுகின்றார்களா என்பது. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள், இல்லை என்று சொல்லி விட்டார்கள்.